# வேளாண்மை
# இடைக்கால நிதி நிலை அறிக்கை
# 2026 - 2027

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர்

## திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்

அவர்களின் உரை



திருவள்ளுவர் ஆண்டு 2057 - மாசித் திங்கள் 5 ஆம் நாள்

17-02-2026

NAL

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

**உலகின் உயிர்களுக்கெல்லாம் உயிராக விளங்குபவர்கள் நம் வேளாண் பெருங்குடி மக்கள்.** உழவர்கள் உழைக்கவில்லை என்றால் இந்நிலத்தில் பிறந்தோர் யாரும் உயிர் வாழ முடியாது.

"**உழுவார் உலகத்தார்க்கு ஆணி**" என்றார் வள்ளுவப் பெருந்தகை. எனவேதான், உழவர் நலனைக் காக்கும் வகையில் தமிழ்நாட்டில் 2021-22 ஆம் ஆண்டில், வேளாண்மைத்துறை, வேளாண்மை- உழவர் நலத்துறை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அத்துடன் உழவர் நலனுக்கான பல சிறப்பான திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

**தமிழ்நாட்டின் வரலாற்றில் முதல்முறையாக வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கை** 2021-22 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கடந்த ஐந்தாண்டுகளில் மாநிலம் முழுவதும் 28 கருத்துக்கேட்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அவற்றில், கலந்துகொண்ட பல்வேறு மாவட்டங்களின் உழவர்கள், உழவர் சங்கங்கள்,

இயற்கை உழவர்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், விவசாய இடுபொருள் விற்பனையாளர்கள் சங்கம், வேளாண் இயந்திரங்கள் தயாரிப்பு நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், விதை உற்பத்தியாளர்கள், வேளாண் வணிகர்கள், முட்டை, பால் உற்பத்தியாளர்கள், கடல்சார் மீனவர்கள், உள்நாட்டு மீனவர்கள், வேளாண் வல்லுநர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரின் கருத்துகள் நேரடியாகவும், மின்னஞ்சல், மனுக்கள் மூலமாகவும் பெறப்பட்டன. அவற்றில் கூறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், உழவர்களின் தேவைகளை நிறைவேற்றும் நோக்கத்துடன் வேளாண்மை, சார்புத் துறைகளுக்கென கடந்த ஐந்து வேளாண்மை நிதி நிலை அறிக்கைகளில் 1,94,076 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உழவர்களின் வாழ்வு வளம்பெறும் வகையிலான பல்வேறு திட்டங்களை உள்ளடக்கிய கடந்த ஐந்து வேளாண் நிதிநிலை அறிக்கைகளை இப்பேரவையில் தாக்கல் செய்யும் வாய்ப்பினை எனக்கு அளித்ததோடு, 2026–27 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, வேளாண்மை-உழவர் நலத்

துறையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள், நடவடிக்கைகள் மற்றும் சாதனைகளை இப்பேரவையில் சமர்ப்பிக்கும் வாய்ப்பினையும் எனக்கு வழங்கிய **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியினை உரித்தாக்குகிறேன்.**

**தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கும் வேளாண்மைத் துறையை நவீனமயமாக்குதல், உழவர்களின் வருமானத்தை உயர்த்துதல், வேளாண்மையில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்தல், உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்தல் ஆகிய இலக்குகளை மையமாகக் கொண்டு இந்த அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.**

தமிழ்நாட்டில் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளும் ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சி அடைந்திட **"கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்"** அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்துடன் இணைந்து 2021-22 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் **இதுவரை 707 கோடி ரூபாய்**

**செலவினம் மேற்கொள்ளப்பட்டு 61 இலட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளனர்**. 6,048 ஏக்கர் தரிசு நிலங்களில் பல்லாண்டு தோட்டக்கலைப் பயிர்களும் 52,664 ஏக்கர் தரிசு நிலங்களில் குறுகிய கால வேளாண் பயிர்களும், ஆக மொத்தம் 58,712 ஏக்கர் தரிசுநிலங்கள் தற்போது சாகுபடி செய்யப்பட்டு, விளை நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. 41,804 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகளின் தரிசு நிலங்களில் உள்ள முட்புதர்களை அகற்றி, சமன்செய்து, உழுது சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

தென்னை விவசாயத்தை ஊக்குவிக்க **53 இலட்சம் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 21 இலட்சம் பழச்செடிச் தொகுப்புகள் பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இதனால் ஊரகப் பகுதிகளில்**, **ஊட்டச்சத்துத் தேவை குறிப்பிடத்தக்க அளவு நிறைவேற வழிவகை செய்யப்பட்டுள்ளது.** 2,115 தனிநபர் ஆதிதிராவிட / பழங்குடியின விவசாயிகளுக்கு சாகுபடிக்காக ஆழ்துளை / குழாய்க் கிணறுகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன.

10,588 சிறுபாசனக் குளங்கள், ஊருணிகள், வரத்துக்கால்வாய்கள், நீர்சேமிப்புக் கட்டுமானங்கள்

தூர்வாரி மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 885 தரம்பிரிப்புக் கூடங்களுடன் கூடிய உலர்களங்கள் கட்டப்பட்டுள்ளன.

இதுதவிர, 1.32 இலட்சம் தெளிப்பான்கள், வேளாண் உற்பத்திக்கான இடுபொருட்கள், தொழில்நுட்பங்கள், பயிற்சிகள், நீர்ப்பாசனம் மற்றும் மதிப்புக்கூட்டலுக்கான கட்டமைப்புகள் போன்ற பல்வேறு திட்டங்களையும் பெரும்பாலான விவசாயிகள் பயனடையுமாறு தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் செயல்படுத்தியதால் இத்திட்டத்தினால் குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்பட்டுள்ளது.

மண்வளத்தைப் பேணிக்காக்கவும், மக்கள் நலம் காக்க, உயிர்ம வேளாண்மை போன்ற அனைத்து வேளாண் செயல்முறைகளை ஊக்கப்படுத்திடவும் **"முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம்**" 2024-25 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. **இத்திட்டம் 178 கோடி ரூபாய் நிதியில் செயல்படுத்தப்பட்டு இதுவரை சுமார் 21 இலட்சத்து 35 ஆயிரம் விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். 2025-26 ஆம் ஆண்டிலும்,**

**இத்திட்டம் 15 திட்டக்கூறுகளை ஒருங்கிணைத்து 142 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பசுந்தாள் உர விதைகள் விநியோகம், மண்வள மேலாண்மை, இயற்கை இடுபொருள் தயாரிப்பு மையங்கள், உயிர்ம வேளாண்மை, வேளாண் காடுகள் உள்ளிட்ட திட்டங்கள் 320 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு பயிர்களையும் உயிரினங்களையும் தாங்கும் மண்ணின் வளம் காக்கப்பட்டு பயிர்வளர்ச்சி மேம்படுத்தப்பட்டு மக்கள் உடல் நலனும் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.**

“**பூமி நமது தாய், அந்த தாய்க்கு என்னவெல்லாம் நேரிடுகிறதோ அதுவே நாளை நமக்கும் நேரிடும்; ஏனென்றால், பூமி மனிதனுக்குச் சொந்தமானது அல்ல; மனிதன்தான் பூமிக்குச் சொந்தமானவன்**” என்று எடுத்துக்கூறி இயற்கை வேளாண்மையினை முன்னிறுத்தியவர் நம்மாழ்வார். அவர் வழியில் இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, நம்மாழ்வார்

அவர்கள் பெயரில் "**நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையம்**" கோயம்புத்தூரில் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மையம் இயற்கை வேளாண்மை தொடர்பான ஆராய்ச்சிகள், பயிற்சிகள், செயல்விளக்கங்களை மேற்கொள்கிறது. இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம், நீலகிரி மாவட்டத்தில் உயிர்ம வேளாண்மை ஊக்குவிப்புத் திட்டம், உயிர்ம வேளாண்மைக்கான மாதிரிப் பண்ணைத்திடல் உருவாக்குதல், உயிர்ம வேளாண்மை சான்றிதழ் பெற, பதிவுக்கட்டணத்திற்கு முழு விலக்கு ஆகிய திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

**நெல் ஜெயராமன் அவர்களின் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கத்தில்** 900 மெட்ரிக் டன் பாரம்பரிய நெல் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு 70,000 விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. பாரம்பரிய சிறுதானியங்கள், பயறு வகை இரகங்கள், மருத்துவ குணம் கொண்ட சிவன் சம்பா போன்ற பாரம்பரிய நெல் இரகங்கள் ஆகியவற்றின் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

வேளாண் காடுகளை ஊக்குவிக்க '**தமிழ்நாடு வேளாண்காடுகள் கொள்கைக்கு**' ஒப்புதல் அளிக்கப்பட்டு, இக்கொள்கை விரைவில் வெளியிடப்படவுள்ளது. **உயர்மதிப்புள்ள தேக்கு, சந்தன மரம், செம்மரம், மகோகனி போன்ற மரங்களை உழவர்கள் தயக்கமின்றி சாகுபடி செய்திட** ஏதுவாக, மரங்களை வெட்டுதல், வெட்டிய மரங்களை எடுத்துச் செல்லுதல் ஆகியவற்றுக்கான விதிகளைத் தளர்த்திடவும், மரங்களை நட்டுப் பராமரிக்கத் தேவையான உதவிகள் வழங்கிடவும், திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தவும் இக்கொள்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நெல் சாகுபடிப் பரப்பையும், உணவு தானிய உற்பத்தியையும் அதிகரிக்க, **கடந்த ஐந்து ஆண்டுகளாக காவேரி டெல்டா பகுதிகளில் மேட்டூர் அணை குறுவை சாகுபடிக்காக குறித்த காலங்களில் திறந்துவிடப்பட்டது. அத்துடன் குறுவை சிறப்புத் தொகுப்பு திட்டமும் ரூ.482 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு, 19.51 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்**.

**2025-26 ஆம் ஆண்டில் முதன்முறையாக, டெல்டா அல்லாத மாவட்டங்களில் கார் / குறுவை / சொர்ணவாரிப் பருவங்களில் நெல் சாகுபடிக்கான சிறப்புத் தொகுப்புத் திட்டம் 115 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டது. இதன் காரணமாக, 2025-26 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் குறுவைப் பருவத்தில் 12.48 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 3 இலட்சம் ஏக்கர் கூடுதல் சாகுபடிப் பரப்பாகும்.**

**"நாடாக ஒன்றோ காடாக ஒன்றோ**

**அவலாக ஒன்றோ மிசையாக ஒன்றோ**

**எவ்வழி நல்லவர் ஆடவர்**

**அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறநானூறு-187)**

இப்பாடலில் தேசத்தின் வளமும், இயல்பும், பண்பும் அத்தேசத்தில் வாழும் ஆற்றல் மிக்க மனிதர்களின் செயலைப் பொறுத்து அமையும் என்பதைப் புறநானூறு தெளிவுபடுத்தியுள்ளது. இதன் அடிப்படையில் தான், 2021-22 முதல் 2024-25 ஆம் ஆண்டு வரை,

**இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்குதல்** திட்டம் செயல்படுத்தப்பட்டு 456 பட்டதாரி இளைஞர்கள் வேளாண் சார்ந்த தொழில் தொடங்க ஊக்குவிக்கப்பட்டு, அவர்களுக்கு 4.56 கோடி ரூபாய் மானியமும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், உழவர்களுக்கு அவர்களின் கிராமங்களுக்கு அருகிலேயே தேவையான விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் போன்ற இடுபொருட்கள், வேளாண் இயந்திரங்கள், தொழில்நுட்ப ஆலோசனைகள் ஆகியவற்றை ஒருங்கே கிடைக்கச் செய்ய, **முதலமைச்சரின் 1,000 உழவர் நல சேவை மையங்கள் அமைக்கும் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. உழவர் நல சேவை மையங்களை அமைக்கும் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மைப் பொறியியல் பட்டதாரிகள், பட்டயதாரர்களுக்கு 30 சதவீத மானியமாக 3 இலட்சம் ரூபாய் முதல் 6 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படுகிறது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

பாரம்பரியமான ஊட்டச்சத்து மிகுந்த உணவுகளால் தமிழ்நாட்டில் ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி மக்களின் உடல்நலத்தை மேம்படுத்த வேண்டியுள்ளது. எனவே, 2021-22 ஆம் ஆண்டிலிருந்து 2024-25ஆம் ஆண்டு வரை 20.89 இலட்சம் ஊட்டச்சத்துத் தளைகள் ரூ.21 கோடி நிதியில் விநியோகிக்கப்பட்டன. **2025-26ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட "ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத்தில்" 15 இலட்சம் காய்கறி விதைத் தொகுப்புகள், 9 இலட்சம் பழச்செடித் தொகுப்புகள் மற்றும் 1 இலட்சம் பயறுவகை விதைத் தளைகள் மொத்தம் 25 இலட்சம் பயனாளிகளுக்கு ரூ.19 கோடி நிதியில் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதனால் போதுமான அளவு காய்கறிகள், பழங்கள் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு அவற்றுக்கான தட்டுப்பாடு நேராமல் ஊட்டச்சத்துப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.** பழங்கள், காய்கறிகள் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி, ஊட்டச்சத்துப் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இப்பயிர்களில் பரப்பு விரிவாக்கம், உயர்

தொழில்நுட்ப சாகுபடி, நிலப்போர்வை அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

மக்கள் நல்வாழ்வு வாழ பெரிதும் துணை நிற்கும் ஊட்டச்சத்து மிகுந்த சிறு தானியங்களின் உற்பத்தியையும் பயன்பாட்டையும் அதிகரிக்கும் நோக்கில் **தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்** 2023-24 ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுத் திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில், இதுவரை 12.84 இலட்சம் விவசாயிகள் ரூ.178 கோடி நிதியில் பயனடைந்துள்ளனர். 20 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சிறுதானியப் பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் 3.36 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் தொகுப்பு செயல்விளக்கத் திடல்கள் அமைக்கப்பட்டு, 90 சிறுதானிய மதிப்புக் கூட்டுதல் மையங்களும் நிறுவப்பட்டுள்ளன.

இதன் விளைவாக, **தேசிய அளவில், தமிழ்நாடு கேழ்வரகு உற்பத்தித் திறனில் முதல் இடம், கேழ்வரகு உற்பத்தியில் இரண்டாம் இடம், குறுதானியங்கள் உற்பத்தியில் ஐந்தாம் இடம் பெற்று சாதனை படைத்துள்ளது.** கம்பு சாகுபடிப் பரப்பு 1.18 இலட்சம்

ஏக்கரிலிருந்து 1.33 இலட்சம் ஏக்கராக அதிகரித்துள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பயறுவகைகளின் உற்பத்தியில் தன்னிறைவு பெற்று, உணவுப் பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையில், **பயறு பெருக்குத் திட்டம்** கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ.174 கோடி நிதியில் 24 இலட்சம் ஏக்கர் பரப்பில் 9.44 இலட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. துவரை சாகுபடிப் பரப்பினை உயர்த்தும் நோக்கத்தில் துவரை சாகுபடிப் பரப்பு விரிவாக்க இயக்கம், நடவுத் துவரை சாகுபடி ஆகிய திட்டங்கள் ரூ.66 கோடி நிதியில் 2.52 இலட்சம் ஏக்கரில் செயல்படுத்தப்பட்டு 1.48 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

எண்ணெய்வித்துப் பயிர்கள் உற்பத்தியில் தன்னிறைவு அடையும் வகையில், **எண்ணெய்வித்து இயக்கத்தின்**கீழ் நிலக்கடலை, எள் உள்ளிட்ட எண்ணெய்வித்துப்பயிர்கள் சாகுபடி செய்ய உயர் தொழில்நுட்பங்களுக்கான இடுபொருட்களும், மானியமும் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில், எண்ணெய்வித்துகளின் பரப்பு மற்றும்

உற்பத்தியைப் பெருக்க ரூ.229 கோடி நிதியில் 14 இலட்சம் ஏக்கரில் எண்ணெய்வித்துப் பயிர்களின் சாகுபடி ஊக்குவிக்கப்பட்டு 7.54 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

தற்போது எத்தனால் உற்பத்தியிலும் தீவனம் தயாரிப்பிலும் மக்காச்சோளத்திற்கான தேவை பெருமளவு அதிகரித்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு மக்காச்சோளப் பயிர் சாகுபடி மூலம் விவசாயிகளுக்கு அதிக வருமானம் கிடைத்திடச் செய்ய, மக்காச்சோள உற்பத்தியினை ஊக்குவிப்பதற்கான திட்ட இனங்கள், கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ.78 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டு 1.50 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

இதனால் மக்காச்சோள சாகுபடி பரப்பு 10 இலட்சம் ஏக்கரிலிருந்து 12 இலட்சம் ஏக்கராக அதிகரித்துள்ளது. மக்காச்சோள உற்பத்தி 26 இலட்சம் மெ.டன்னிலிருந்து 27 இலட்சம் மெ.டன்னாக அதிகரித்துள்ளது.

வேளாண் பணிகளை உழவர்கள் காலதாமதமின்றி மேற்கொள்ளவும் வேளாண் பணியாளர் பற்றாக்குறையை ஈடு செய்யவும் **வேளாண் இயந்திரமயமாக்கல்**

திட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில், மொத்தம் **77,499 வேளாண் இயந்திரங்கள், கருவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. இது தவிர 1,320 வேளாண் இயந்திர வாடகை மையங்களும் நிறுவப்பட்டன. இதற்கென மானியமாக மொத்தம் 783 கோடி ரூபாய் வழங்கப்பட்டது.** இதற்கு முந்தைய ஐந்து ஆண்டுகளில், 29,945 வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மட்டுமே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் மூலம், பாசனத்திற்காக விவசாயிகளுக்கு தடையற்ற மின்சாரத்தை உறுதி செய்ய, 4,150 சூரிய சக்தி பம்புசெட்டுகள் நிறுவப்பட்டு ரூ.83 கோடி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் 5,954 புதிய மின்மோட்டார் பம்புசெட்டுகளும் ரூ.7.67 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

இது தவிர, "இ-வாடகை" கைபேசி செயலி மூலம் வேளாண்மைப் பொறியியல் துறையின் 3,816 வேளாண் இயந்திரங்கள், கருவிகள் தேவைப்படும் விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. 2020-21ஆம் ஆண்டில்,

1,265 **வேளாண் இயந்திரங்கள்**, கருவிகளை மட்டுமே வாடகைக்கு வழங்கியிருந்த நிலையில், கடந்த ஐந்து ஆண்டுகளில் அதிக எண்ணிக்கையில் வேளாண் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு இச்சேவை வலுப்படுத்தப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

"**நிலத்தொடு நீர் இயைந்து**" என்று வள்ளுவம் கூறுவதனை முழுமையாக உணர்ந்தே இந்த அரசு தமிழ்நாட்டில் நிலையான வேளாண்மைக்கு நீர்ப்பாசனத்தை உறுதி செய்யும் அனைத்து முனைப்புகளையும் மேற்கொண்டுள்ளது. இதன் அடிப்படையில், கடந்த ஐந்து ஆண்டுகளில், இதுவரை சுமார் 2 **இலட்சம் புதிய இலவச மின்சார இணைப்புகள்** விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், மொத்தமுள்ள 23.86 இலட்சம் விவசாய மின் இணைப்புகளுக்கு இலவச மும்முனை மின்சாரம் வழங்குவதற்கென இத்துறையால் இதுவரை ரூ.33,904 கோடி நிதி செலவிடப்பட்டுள்ளது.

பாசனநீரினை சிக்கனமாகப் பயன்படுத்தி உற்பத்தியினை அதிகரிக்க **நுண்ணீர்ப்பாசனத் திட்டம்**,

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்துடனும், இதர விவசாயிகளுக்கு, 75 சதவீத மானியத்துடனும் முழு முனைப்புடன் செயல்படுத்தப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில், இத்திட்டத்தில் 5 இலட்சத்து 3 ஆயிரம் எக்டரில் 4,061 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நுண்ணீர்ப்பாசன அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. இதனால் 5 இலட்சத்து 13 ஆயிரம் விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

காவேரிப் படுகை, கதிரால் நிறைந்து, களஞ்சியங்கள் நிறையும்படி, மேட்டூர் அணை குறித்த காலங்களில் திறந்து விடப்பட்டதோடு, கடைமடைப்பகுதி வரை பாசனநீரைத் தங்கு தடையின்றிக் கொண்டு செல்ல ஏதுவாக, காவேரி, வெண்ணாறு, வெள்ளாறு வடிநிலப்பகுதிகள், கல்லணைக் கால்வாய் பகுதிகளில் கடந்த ஐந்து ஆண்டுகளில், 8,371 கிலோ மீட்டர் நீளத்திற்கான “சி” மற்றும் “டி” பிரிவு வாய்க்கால்கள் ரூ.33.77 கோடி செலவில் தூர்வாரப்பட்டுள்ளன. நீர்வளத்துறை மூலம், அணைகளின் ஆயக்கட்டுப் பகுதிகளில் ரூ.498 கோடி செலவில் 4,580 தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெரம்பலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், தருமபுரி, விருதுநகர் ஆகிய ஏழு மாவட்டங்களில் உள்ள 357 நீர்வடிப்பகுதிகளில் 2 இலட்சம் எக்டரில் ரூ.369 கோடி மதிப்பீட்டில் நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்தப்பட்டு பல்வேறு இயற்கை வள மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**இத்தகைய முத்தான முன்முயற்சிகளின் விளைவாக, தமிழ்நாட்டில் கூடுதலாக 3.48 இலட்சம் எக்டர் விவசாய நிலங்களுக்குப் பாசன வசதி கிடைத்துள்ளது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.**

குறைந்த பரப்பில் அதிக வருமானமும், ஊட்டச்சத்துப் பாதுகாப்பும் தரவல்ல காய்கறிகள், பழங்கள், சுவைதாளிதப் பயிர்கள் போன்ற தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி, பலன்தரும் பழப்பயிர் சாகுபடித்திட்டம், பலா இயக்கம், முருங்கை இயக்கம், வெங்காய சாகுபடி இயக்கம், மிளகாய் மண்டலம், கறிவேப்பிலை தொகுப்பு, சிறப்பு தோட்டக்கலைப் பயிர்களில் பரப்பு விரிவாக்கம், முக்கனி மேம்பாட்டுத்

திட்டம் போன்ற திட்டங்கள் மூலம் பெருமளவு ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

**தக்காளி, வெண்டை, கத்தரி, முருங்கை போன்ற காய்கறிகளின்** பரப்பு 1 **இலட்சம்** எக்டரில் விரிவாக்கம், 1,979 எக்டர் நிரந்தரப் பந்தல் ஆகியவை மேற்கொள்ள 1.68 **இலட்சம்** விவசாயிகள் **ரூ.259 கோடி** மானியம் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

**மா, பலா, வாழை, கொய்யா, பப்பாளி போன்ற பழங்களின்** சாகுபடிப் பரப்பு 36,555 எக்டரில் விரிவாக்கம் செய்யப்பட்டது. இதற்கென, ரூ.72.47 கோடி மானியம் வழங்கப்பட்டு 48,580 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

உலக அளவில் புகழ் பெற்ற, ஏற்றுமதி வாய்ப்புகள் நிறைந்த **மிளகாய், மஞ்சள், மிளகு, ஏலக்காய், கிராம்பு, ஜாதிக்காய் போன்ற சுவைதாளிதப் பயிர்களின்** சாகுபடிப் பரப்பு 22,980 எக்டரில் விரிவாக்கம் செய்யப்பட்டது. இதற்கென, ரூ.32 கோடி மானியம் அளிக்கப்பட்டு 29,855 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

**மல்லிகை, ரோஜா, செவ்வந்தி, சாமந்தி, சம்பங்கி போன்ற மலர்களின்** மூலம் தினசரி வருமானம் பெற்று

விவசாயிகள் பயனடைய, அவற்றின் சாகுபடிப் பரப்பு **11,380** எக்டரில் விரிவாக்கம் செய்யப்பட்டது. இதற்கென, **ரூ.28 கோடி** மானியமாக வழங்கப்பட்டு **18,130** விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

குடைமிளகாய், கார்னேஷன் போன்ற உயர்மதிப்புள்ள தோட்டக்கலைப் பயிர்களை, ஆண்டு முழுவதும் பாதுகாப்பான சூழலில் சாகுபடி செய்து அதிக வருமானம் பெற்றிட, **பசுமைக்குடில், நிழல்வலைக் குடில் சாகுபடி** 23 இலட்சத்து 55 ஆயிரம் சதுர மீட்டரில் ஊக்குவிக்கப்பட்டு 1,756 விவசாயிகளுக்கு 91 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டின் அத்தியாவசிய வணிகப் பயிரான முந்திரியின் முக்கியத்துவம் கருதி**, கடந்த ஐந்து ஆண்டுகளில், 8,400 எக்டரில் முந்திரி பரப்பு விரிவாக்கத் திட்டம் ரூ.12 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டு 9,687 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

**அரசின் இத்தகைய முயற்சிகளால், தமிழ்நாடு தேசிய அளவில் மரவள்ளி, மல்லிகை உற்பத்தியில் முதலிடமும், நெல்லி, முட்டைக்கோசு, முள்ளங்கி உற்பத்தித்திறனில்**

**முதலிடமும், மரவள்ளி, மல்லிகை, பலா, கொய்யா உற்பத்தித்திறனில் இரண்டாம் இடமும் பெற்றுள்ளது.**

அறுவடைக்குப்பிந்தைய இழப்புகளைக் குறைக்கவும் சந்தை மதிப்பை உயர்த்தவும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் கடந்த ஐந்து ஆண்டுகளில் 3,435 சிப்பம் கட்டும் அறைகள், 8,218 மெ.டன் கொள்ளளவு கொண்ட 5 குளிர் பதனக் கிடங்குகள், 3.44 இலட்சம் மெ.டன் கொள்ளளவிலான வெங்காய சேமிப்புக் கிடங்குகள் ரூ.175 கோடி செலவினத்தில் அமைக்கப்பட்டு, 15,606 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

**தென்னை வளர்ச்சி**

இலட்சக்கணக்கான விவசாயிகளின் வாழ்வாதாரமாக விளங்கும் தென்னையின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் பொருட்டு, மாநில தென்னை நாற்று மையம் நிறுவுதல், செயல் விளக்கத்திடல் அமைத்தல், இயற்கை உரக்கூடாரம் அமைத்தல், தென்னந்தோப்புகளில் மறுநடவு மற்றும் புத்தாக்கம் ஆகிய இனங்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில்

17,860 எக்டரில் ரூ.54 கோடி நிதியில் மேற்கொள்ளப்பட்டு 26,800 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

**தென்னை வேர்வாடல் நோய் மீட்புத் திட்டம்** 2023-24 மற்றும் 2024-25 ஆம் ஆண்டுகளில், கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் 3,943 எக்டரில் செயல்படுத்தப்பட்டது. வேர்வாடல் நோய் தாக்கிய மரங்களை வெட்டி அகற்றுதல், தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்குதல் மற்றும் நோய் தாக்கிய தென்னந்தோப்புகளை புத்தாக்கம் செய்ய இடுபொருட்கள் வழங்குதல் போன்ற இனங்கள் ரூ.18.48 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டு 6,300 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். இதுதவிர, தீவிர முகாம்கள் நடத்தி, உரிய தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்கியதால் 17,816 எக்டர் தென்னை பரப்பு வேர்வாடல் நோயிலிருந்து மீட்கப்பட்டது.

**பனை மேம்பாடு**

தமிழ்நாட்டின் மாநில மரமான பனையின் முக்கியத்துவம் கருதி, **2021-22 ஆம் ஆண்டு முதல் "பனை மேம்பாட்டு இயக்கம்**” செயல்படுத்தப்பட்டு

வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில், தோட்டக்கலைத் துறை மூலம் 68 இலட்சம் பனை விதைகள், 1 இலட்சத்து 28 ஆயிரம் பனங்கன்றுகள் விநியோகம், 354 பனை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் கூடங்கள் ஆகிய இனங்கள் செயல்படுத்தப்பட்டன.

பனை பொருள் வளர்ச்சி வாரியம் மூலம் 1,350 நபர்களுக்கு பனை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சி மற்றும் உபகரணங்கள், 650 மகளிருக்கு பனை ஓலை தயாரிக்கும் பயிற்சி மற்றும் உபகரணங்கள் போன்ற திட்ட இனங்கள் செயல்படுத்தப்பட்டன. மொத்தம் ஒன்பது கோடியே 17 இலட்சம் ரூபாய் நிதியில் திட்டம் செயல்படுத்தப்பட்டு, ஒரு இலட்சத்து 45 ஆயிரம் பயனாளிகள் பயனடைந்துள்ளனர். இவைதவிர, தூத்துக்குடி மாவட்டம், வீரபாண்டியபட்டணத்தில் தரமான பனை வெல்லம் உற்பத்திக்கான பொது பயன்பாட்டு மையம் அமைக்கப்பட்டது. கடந்த ஐந்து ஆண்டுகளில், சுமார் 80 கோடி ரூபாய் மதிப்பிலான பனை பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**எல்லார்க்கும் எல்லாம்**

'எல்லார்க்கும் எல்லாம்' என்ற கொள்கையுடன் செயல்பட்டுவரும் இவ்வரசு அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியினை அடைவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. எனவேதான், ஒருங்கிணைந்த பண்ணையம், பசுமைக்குடில், நிழல்வலைக்குடில், வேளாண் இயந்திரமயமாக்கல், மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள், சூரிய சக்தி பம்புசெட்டுகள் போன்ற உயர் மதிப்பு திட்ட இனங்களில், **ஆதிதிராவிடர், பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு 70 சதவீத மானியத்துடன்** வழங்கப்படுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில், இதுவரை ரூ.62 கோடி கூடுதல் மானியமாக வழங்கப்பட்டு 17,340 ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு மின்சார அல்லது சூரிய சக்தி பம்புசெட்டுடன் கூடிய 2,115 ஆழ்துளை அல்லது குழாய்க் கிணறுகள், 122 கோடி ரூபாய் நிதி செலவில் 100 சதவீத மானியத்தில் அமைத்துத்தரப்பட்டுள்ளன.

**விளைவித்தவர் உழவர்; விலை தந்து காத்தது அரசு**

"**நிலத்துக்கு அணியென்ப நெல்லும் கரும்பும்**" என்று நாலடியார் மொழிகிறது. இவ்வாறு நெல்லையும், கரும்பையும் அதிகம் பயிரிடும் தமிழ்நாட்டு உழவர்களின் வருமானத்தினை உயர்த்தி அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் விதமாக தமிழ்நாடு அரசு நெல், கரும்பிற்கு சிறப்பு ஊக்கத்தொகையினை வழங்கி வருகிறது. 2025-26 குறுவை கொள்முதல் பருவத்தில் சன்ன இரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.156/-ம், சாதாரண இரகங்களுக்கு ரூ.131/-ம் ஊக்கத்தொகையாக வழங்கி அவற்றின் கொள்முதல் விலை முறையே ரூ.2,545 மற்றும் ரூ.2,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில், **இதுவரை 186 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு ரூ.2,118 கோடி ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.**

2020-21 **ஆம் ஆண்டினை ஒப்பிடுகையில் ஊக்கத்தொகை சன்ன இரக நெல்லுக்கு 123 சதவீதமும் சாதாரண இரக நெல்லுக்கு 162 சதவீதமும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.**

2020-21 அரவைப் பருவம் முதல் ஒன்றிய அரசால் கரும்பிற்கு நிர்ணயிக்கப்படும் நியாயமான மற்றும் ஆதாய விலைக்கு மேல் கூடுதலாக சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. 2024-25 அரவைப் பருவத்தில் சிறப்பு ஊக்கத்தொகையாக ரூ.349/- நிர்ணயிக்கப்பட்டு, கரும்பு விலை டன் ஒன்றிற்கு ரூ.3,500/- ஆக விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில், 5.70 இலட்சம் விவசாயிகளுக்கு இதுவரை ரூ.1,094 கோடி ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இவை தவிர, விலை வீழ்ச்சிக் காலங்களில் வருமான இழப்பிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்க இதுவரை மொத்தம் ரூ.96.66 கோடி மதிப்பிலான 12,236 மெட்ரிக் டன் பச்சைப்பயறு, உளுந்து, துவரை ஆகியவை 10,690 விவசாயிகளிடமிருந்து குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இதுதவிர, ரூ.1,600 கோடி மதிப்பிலான 1.47 இலட்சம் மெ.டன் கொப்பரை ஒரு இலட்சம் விவசாயிகளிடமிருந்து குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

இயற்கைச் சீற்றங்களால் பயிர்கள் சேதமுற்று உழவர்கள் வாட்டமுறும்போது அவர்களின் நலன் காக்கும் வகையில் இந்த அரசின் ஆதரவுக்கரம் உடனுக்குடன் நீட்டப்படுகிறது.

**இயற்கைப் பேரிடர் நிவாரணம்**

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் 184 இலட்சம் ஏக்கர் பரப்பு, சுமார் 80 இலட்சம் விவசாயிகளால் காப்பீடு செய்யப்பட்டது. கடந்த ஐந்தாண்டுகளில், காப்பீட்டுக் கட்டண மானியமாக 6,073 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், மகசூல் இழப்பிற்கு 38 இலட்சம் விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக 6,063 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்தினால் தமிழ்நாட்டில் வெள்ளம், புயல், வறட்சி போன்ற இயற்கைப் பேரிடர்கள் வாடிக்கையாகிவிட்டன. இதனால் ஏற்படும் பயிர் பாதிப்புகளால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்காமல் காத்திட, தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில், இயற்கைப்

பேரிடர்களால் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் 16.20 இலட்சம் எக்டரில் ஏற்பட்ட பயிர் சேதத்திற்கு ரூ.2,045 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டது. இதனால், 25.36 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

இது தவிர, 2023-24ஆம் ஆண்டில், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்களில் கனமழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக 3,765 ஏக்கர் வேளாண் நிலங்களில் படிந்த மணல் திட்டுக்கள் ரூ.6 கோடி செலவில் வேளாண்மைப் பொறியியல் துறையினால் அகற்றப்பட்டு 2,580 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

**வேளாண் கண்காட்சிகள், கருத்தரங்கங்கள்**

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, உழவர்கள் உள்ளிட்ட அனைவரும் பயன்பெறும் வகையில் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கங்கள்** திருச்சி, ஈரோடு மாவட்டம், பெருந்துறை, திருவண்ணாமலை ஆகிய மூன்று இடங்களிலும் சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில், இரண்டு முறை **வேளாண் வணிகத் திருவிழாவும்** நடத்தப்பட்டு,

நவீன தொழில்நுட்பங்கள், கண்டுபிடிப்புகள், வேளாண் இயந்திரங்கள், கருவிகள், அறுவடை பின்சார் மேலாண்மை நுட்பங்கள், மதிப்புக்கூட்டும் நுட்பங்கள், கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு நுட்பங்கள் போன்றவை காட்சிப்படுத்தப்பட்டு ஏறத்தாழ 9 இலட்சம் விவசாயிகள், மாணவர்கள், பொதுமக்கள் பார்வையிட்டனர். இக்கண்காட்சிகளில், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், தொழில்முனைவோரின் சுமார் 7 கோடி ரூபாய் மதிப்பிலான வேளாண் விளைபொருட்களும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களும் விற்பனை செய்யப்பட்டன.

**வேளாண் வணிகம்**

கடந்த ஐந்து ஆண்டுகளில், அதிகபட்சமாக 137 இலட்சம் மெட்ரிக் டன் வேளாண் விளைபொருட்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளன.

ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில், 75,500 மெ.டன் கொள்ளளவு கொண்ட 69 சேமிப்புக் கிடங்குகள், 78 உலர்களங்கள், 28 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு சொந்தக் கட்டடங்கள், கிராமங்களில் தரம்பிரிப்புக் கூடங்களுடன் கூடிய

உலர்களங்கள் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகள் 368 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் புதிதாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடமும் ஈரோடு மாவட்டத்தில் மஞ்சள் ஏற்றுமதி மையமும் 15 கோடி ரூபாய் மதிப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதுதவிர, 200 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கட்டமைப்பு வசதிகள் ரூ.97.30 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் சுமார் 3 இலட்சத்து 57 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளில், கூடுதலாக 150 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் மின்னணு தேசிய வேளாண் சந்தையுடன் (eNAM) இணைக்கப்பட்டு ரூ.8,748 கோடி மதிப்பிலான 30 இலட்சம் மெட்ரிக் டன் விளைபொருள் வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டு சுமார் 18 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும், கடந்த 2020-21 ஆம் ஆண்டில், 1.8 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த eNAM வர்த்தகம் இந்த அரசின் பல்வேறு சீரிய நடவடிக்கைகளால் தற்போது 8 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில், புதியதாக பண்ருட்டி, ஒட்டன்சத்திரத்தில் தலா 1,000 மெ.டன் குளிர்பதனக் கிடங்குகள், ஈரோடு மாவட்டத்தில் காய்கறி மற்றும் பழங்களைச் சேமிக்க 1,750 மெ.டன் கொள்ளளவு கொண்ட 5 குளிர்பதனக் கிடங்குகள் ஆகியவை அமைக்கப்பட்டு விவசாயிகள், வணிகர்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கூடுதலாக, தொண்டாமுத்தூர், இளையான்குடி, திசையன்விளை மற்றும் நாயுடுமங்கலத்தில் மொத்தம் 600 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன. குளிர்பதனக் கிடங்குகள் அமைப்பதற்கென மட்டும் 27 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் எண்ணத்தில் உதித்து செயல்வடிவம் பெற்ற ஒப்பற்ற திட்டம் "**உழவர் சந்தைகள்**". உழவர்களின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவும் காய்கறிகள், பழங்கள் நுகர்வோர்க்கு அன்றாடம் கிடைக்கவும் 194 உழவர் சந்தைகள் செயல்பட்டுவருகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில்,

15 புதிய உழவர் சந்தைகள் அமைக்கப்பட்டுள்ளன. 134 உழவர் சந்தைகள் ரூ.46.45 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்டுள்ளன. மாநகராட்சிப் பகுதிகளில் 30 நடமாடும் காய்கனி அங்காடிகளும், மாவட்டத்திற்கு ஒரு உழவர் சந்தை வீதம் 37 மாவட்டங்களில் மாலை நேரங்களில் உழவர் சந்தைகளும் இயங்கி வருகின்றன.

அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டதால், உழவர் சந்தைகளுக்கு வரும் காய்கனிகளின் தினசரி வரத்து 2,500 மெட்ரிக் டன்னாகவும், தினசரி பொதுமக்களின் வருகை தற்போது 4 இலட்சமாகவும் அதிகரித்துள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம்**

விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தின் இரண்டாம் பகுதியில் சிப்பம் கட்டும் கூடங்கள் மற்றும் குளிர்பதனக் கிடங்குகளுடன் கூடிய 20 முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதனால், அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள் குறைக்கப்படுவதுடன் சந்தை இணைப்புகள்

ஏற்படுத்தப்பட்டு விவசாயிகளின் பொருளாதாரம் வலுப்படுத்தப்படுகிறது.

**மதிப்புக் கூட்டும் மையங்கள்**

தக்காளி, மா, பலா, மிளகாய், தேங்காய், சிறுதானியங்கள் போன்ற விளைபொருட்களை மதிப்புக்கூட்டி உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தைகளில் விற்பனை செய்ய ஏதுவாக, 10 **கோடி ரூபாய் வரையிலான புதிய திட்டங்களுக்கு 25 சதவீதம் முதல் 35 சதவீதம் வரை என ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது**. இத்திட்டத்தில், 100 மதிப்புக்கூட்டும் மையங்கள் அமைப்பதற்கு 50 கோடி ரூபாய் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சமையல் எண்ணெய்க்கான சந்தை ஊக்குவிக்கும் மையம், வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் உழவர் ஆலோசனை மையங்கள், சிறுதானியங்கள், மிளகு பதப்படுத்தும் நிலையங்கள், தென்னை மதிப்புக் கூட்டும் மையம், வாழை ஏல மையம், மஞ்சள் மதிப்புக்கூட்டும் மையம், ஒருங்கிணைந்த கிராம வேளாண் சந்தை வளாகம்

போன்ற வசதிகள் மொத்தம் ரூ.134 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த ஐந்து ஆண்டுகளில், மாநிலத்தின் தனித்துவமான விளைபொருட்களுக்கு **புவிசார் குறியீடு** பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இதுவரை 41 விளைபொருட்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டன. இதில், சோழவந்தான் வெற்றிலை, பண்ருட்டி பலாப்பழம், பண்ருட்டி முந்திரி, விருதுநகர் சம்பா வத்தல், இராமநாதபுரம் சித்திரைக்கார் அரிசி, புளியங்குடி எலுமிச்சை, செட்டிக்குளம் சின்ன வெங்காயம், தூயமல்லி அரிசி, கவுந்தப்பாடி நாட்டுச்சர்க்கரை ஆகிய 9 **விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது**, மீதமுள்ள 32 விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**ஏற்றுமதிக்கான முனைப்புகள்**

சுவைதாளிதப் பொருட்களை விளைவிக்கும் விவசாயிகள் / உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு ஏற்றுமதி தொடர்பான உற்பத்தியாளர் - வர்த்தகர்கள் இணைப்புடன்

கூடிய பயிற்சி விருதுநகர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் நடத்தப்பட்டு, 200 நபர்கள் பயன் அடைந்துள்ளனர். சிறுதானியங்கள், நிலக்கடலை, பலா ஆகியவற்றின் விற்பனை, ஏற்றுமதியை அதிகரித்திட விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ஏற்றுமதி தொடர்பான பயிற்சி மற்றும் வர்த்தக இணைப்புக் கூட்டம் விருதுநகர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் நடத்தப்பட்டுள்ளன.

விவசாயிகளின் நலனைக் காப்பதில் உறுதியாக உள்ள இந்த அரசு, மா உள்ளிட்ட விளைபொருட்களின் பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதிக்கான சூழலை வலுப்படுத்த பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளது. விவசாயிகள், பதப்படுத்துபவர்கள், ஏற்றுமதியாளர்கள், அலுவலர்கள் அடங்கிய மா பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதிக்கான மையக் குழு (Core Group) ஒன்று உருவாக்கப்பட்டு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு மா பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதிக்கான முனைப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. மா விவசாயிகளை உரிய வணிகர்களுடன் இணைப்பதற்காக மா விவசாயிகள்

உள்ளிட்ட 2,196 விவசாயிகளை உள்ளடக்கிய 51 வணிகர்-விற்பனையாளர் சந்திப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

மாம்பழத்திற்கான ஏழு ஏற்றுமதித் தொகுப்புகள் அடையாளம் காணப்பட்டு பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதிக்கான கட்டமைப்பு மேம்பாட்டிற்கென APEDA தரச்சான்று பெற்ற சிப்பம் கட்டும் அறைகள், வெந்நீர் சுத்திகரிப்பு நிலையம், நீராவி வெப்பப்படுத்தும் அலகு, குளிர்பதனக் கிடங்குகள் போன்ற கட்டமைப்புகள் உருவாக்கவும், வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி மற்றும் சென்னையில் நான்கு உணவுப் பரிசோதனை ஆய்வகங்கள் (Food Testing Laboratory) நிறுவப்பட்டு வருகின்றன. வேளாண் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் Hortinet இணைய தளத்தில் 3,000 மா விவசாயிகளைப் பதிவுசெய்து, 1,000 மா விவசாயிகளுக்கு நன்னெறி வேளாண் நடைமுறைகள் (Good Agricultural Practices) சான்றிதழை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

சிறு, குறு விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் பொருட்களைத் திரட்டி, மதிப்புக்கூட்டி,

சந்தைப்படுத்தவும், ஏற்றுமதி செய்யவும், உரிய விலை பெறவும் வழிவகை காணுவதற்காக தமிழ்நாட்டில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், இடுபொருள் விற்பனை, பதப்படுத்துதல், ஏற்றுமதி ஆகியவற்றில் ஈடுபடுவதற்குத் தேவையான மூலதன நிதி, முதலீட்டு மானியம் ஆகியவை பல்வேறு திட்டங்களின் கீழ் வழங்கப்படுகின்றன. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் பயன்பாட்டிற்காக முதன்மை பதப்படுத்துதல் நிலையங்கள், மதிப்புக்கூட்டுதல் இயந்திரங்கள் அரசால் அமைக்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

வேளாண்மையை முன்னெடுத்துச் செல்வதில் வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இந்த அரசு பொறுப்பேற்றது முதல் ஐந்து வேளாண்மை நிதி நிலை அறிக்கைகளில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு 3,065 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து பல புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இளங்கலை வேளாண்மை, தோட்டக்கலைப் படிப்பில் தமிழைப் பயிற்று மொழியாக அறிமுகப்படுத்தியதன் மூலம் கிராமப்புறங்களைச் சேர்ந்த மாணவர்கள் மொழித் தடையின்றி வேளாண் கல்வி கற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், நாகப்பட்டினம், சிவகங்கை, கரூர் மாவட்டங்களில் மூன்று அரசு வேளாண் கல்லூரிகள் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு தோட்டக்கலைக்கல்லூரி புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஐந்து ஆண்டுகாலத்தில், ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் மஞ்சள் ஆராய்ச்சி மையம், தூத்துக்குடி மாவட்டம், கிள்ளிகுளம் வ.உ.சிதம்பரனார் வேளாண்மைக் கல்லூரி வளாகத்தில் வாழை ஆராய்ச்சி நிலையம், பனை ஆராய்ச்சி நிலையம் புதிதாக ஏற்படுத்தப்பட்டு புதிய இரகங்களை உருவாக்குவதற்காக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் நமது மாநில மரமான பனையில் குட்டை இரகத்தினை உருவாக்குவதற்கான ஆராய்ச்சியும் நடைபெற்று வருகின்றது.

**மேலும், கடந்த ஐந்து ஆண்டுகளில், 101 புதிய பயிர் இரகங்கள், 21 வேளாண் நுட்பங்கள், 16 புதிய பண்ணைக்**

**கருவிகள் நமது உழவர் பெருமக்களின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.** களப்பிரச்சனைகளுக்கு அறிவியல் பூர்வமான தீர்வுகளைக் கண்டு நிவர்த்திசெய்யும் வகையில் வட்டாரத்திற்கு ஒரு வேளாண் விஞ்ஞானி வேளாண்மைத் துறையுடன் ஒருங்கிணைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றனர்.

அதுமட்டுமின்றி, **காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைப்பதற்கான சிறப்பு வேளாண் கிராமங்கள் உருவாக்குதல்**, **குறைந்த சர்க்கரை அளவுக் குறியீடு** (Low Glycemic Index) **கொண்ட நெல் இரகங்களை உருவாக்குதல்**, நுண்ணுயிர்க் கலவையின் மூலம் உயிர்ம வேளாண்மையை ஊக்குவித்தல், தோட்டக்கலைப் பயிர்களுக்கான இயந்திரமயமாக்கல் ஆகியவற்றில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ (Rugose Spiralling whitefly) மேலாண்மைக்காக ஒட்டுண்ணிகள், இரைவிழுங்கிகளின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை வலுப்படுத்துதல், உயிர்ம வேளாண் விளைபொருட்களுக்குத் தர நிர்ணய ஆய்வகங்கள்

அமைத்தல், மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கிடையே வேளாண் நிரல் திருவிழா (Agri-Hackathon) மூலம் வேளாண்மையில் நிலவிடும் முக்கிய சவால்களுக்கான சிறந்த தீர்வுகளை தேர்வுசெய்திட **"டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிதி"** போன்ற ஆராய்ச்சித் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களுக்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்தம், 134 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண் கல்வியின் தரம் பெருமளவு உயர்த்தப்பட்டதன் காரணமாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் **2021-ஆம் ஆண்டில் 74 சதவீதமாக இருந்த இளங்கலை மொத்த மாணவர் சேர்க்கை 2025-ஆம் ஆண்டில் 97 சதவீதமாக உயர்ந்துள்ளது.**

விவசாயிகளுக்கான சேவைகளை ஒருங்கிணைக்கும் நோக்கில், விவசாயி பதிவு (Farmer Registry) திட்டத்தின் கீழ் ஆதார் எண்ணுடன் விவசாயிகளின் நில விவரங்களை இணைத்து 33 இலட்சம் பிரத்யேக விவசாயி அடையாள

எண்கள் (Farmer ID) உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், 24 முக்கிய சேவைகளுடன் '**உழவர்**' **கைபேசி செயலி செயல்படுத்தப்படுகிறது**. இதுவரை சுமார் 20 இலட்சம் விவசாயிகள் இச்செயலியைப் பதிவிறக்கம் செய்து அரசு சேவைகளைப் பெற்று வருகின்றனர்.

**"வேளாண்மையின் எதிர்காலம் இடுபொருட்களைச் சார்ந்ததல்ல, மாறாக அறிவைச் சார்ந்ததாகும். விவசாய முறைகள் இந்த திசையில்தான் பயணிக்க வேண்டும்."**

என்று வேளாண் விஞ்ஞானி முனைவர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் அறிவுறுத்தியதன் அடிப்படையில் விவசாயிகள், வேளாண் தொழில் முனைவோர், குறிப்பாக இளைஞர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கி அவர்களை வேளாண் சார்ந்த பணிகளில் தக்க வைத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு '**வேளாண் இயந்திரங்கள் செயல் விளக்கப் பயிற்சி**' அளிக்கப்படுகிறது. மேலும், இந்தியாவில் முதல் முறையாக டிராக்டர் பாவனை பயிற்சி சாதனம் (Simulator), இரட்டை கட்டுப்பாட்டு

டிராக்டர் போன்ற நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கிராமப்புற இளைஞர்களுக்கு 'டிராக்டர் ஓட்டுநர் பயிற்சி' அளிக்கப்பட்டு, ஓட்டுநர் உரிமமும் பெற்றுத்தரப்படுகிறது.

மலேசியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், நார்வே, நெதர்லாந்து, எகிப்து ஆகிய அயல் நாடுகளுக்கு மொத்தம் 150 விவசாயிகள் கண்டுணர் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டு தோட்டக்கலை, வேளாண் பயிர்கள் சாகுபடித் தொழில்நுட்பங்கள் மற்றும் நடைமுறைகள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில், நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்த 40,213 பயிற்சிகள், 10,034 கண்டுணர் பயணங்கள், 2,662 பண்ணைப் பள்ளிகள் மற்றும் 50,110 செயல் விளக்கத் திடல்கள் போன்றவை ரூ.128 கோடி செலவில் நடத்தப்பட்டு 22 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

இது தவிர, விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், விவசாயக்குழுக்கள், வேளாண் மகளிர் என சுமார் 30,000 நபர்களுக்கு பயிர் சாகுபடித் தொழில்நுட்பங்கள், தேனீ வளர்ப்பு, மதிப்புக் கூட்டல்,

ஏற்றுமதி தொழில்நுட்பங்கள், வேளாண் பொருட்கள் மதிப்புக்கூட்டும் இயந்திரம் இயக்குதல், பராமரித்தல், நுண்ணீர்ப்பாசன அமைப்புகளின் பராமரிப்பு போன்றவை குறித்த பயிற்சிகள், செயல்விளக்கங்கள், பட்டறிவுப் பயணங்கள், கருத்தரங்கங்கள் ஆகியவை அளிக்கப்பட்டன. இதுதவிர, ட்ரோன் மூலம் இடுபொருட்கள் அளிக்கும் தொழில் நுட்ப செயல் விளக்கப் பயிற்சி 9,300 விவசாயிகளுக்கும், 2,000 வேளாண் மகளிருக்கு மாற்று வாழ்வாதாரப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளன.

**பூங்காக்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

இயற்கை எழில் கொஞ்சி மக்களை மகிழ்விப்பதில் பூங்காக்கள், தோட்டங்களின் பங்கு மிக அதிகம். எனவேதான், வேளாண்மை உற்பத்தியினை அதிகரிப்பது, உழவர் நலனைக் காப்பது போன்ற நடவடிக்கைகளுடன், பல ஆண்டுகளாக தனியார் வசம் இருந்த 176 ஏக்கர் பரப்பிலான அரசு நிலங்கள் பெரும் சட்டப்போராட்டத்தால் மீட்கப்பட்டு மக்களின் பசுமைத் தாகத்தினைத் தீர்க்கவல்ல பூங்காக்கள் உருவாக்கப்படுகின்றன.

சென்னையில் **உலகத்தரத்திலான கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா**, திருவண்ணாமலையில் கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா, நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் ஜான் சல்லிவன் பூங்கா என மூன்று பூங்காக்கள் மொத்தம் ரூ.71 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை, இப்பூங்காக்களை 8.70 இலட்சத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கண்டுகளித்துள்ளனர். மேலும், மருதம் பூங்கா, நெய்தல் பூங்கா, முல்லைப் பூங்கா, சூரியத் தோட்டம், கிண்டி சுற்றுச் சூழல் பூங்கா போன்ற புதிய பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. நீலகிரி மாவட்டம் அரசு தோட்டக்கலைப் பூங்கா, சென்னை, மாதவரம் தோட்டக்கலைப் பூங்கா மற்றும் சேலம் மாவட்டம் ஏற்காடு பூங்கா மற்றும் 24 பிற பூங்காக்கள் ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகள் 18.23 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம்**

உழவர்கள் வியர்வையில் விளைந்த விளைபொருள் வீணாகாமல் காத்திடவும், மதிப்புக்கூட்டி, ஏற்றுமதி செய்து

அதிக வருமானம் பெறவும் ஏதுவாக, தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம், 2022-23 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் இதுவரை, 5,000 மெட்ரிக் டன் அளவிற்கு வேளாண் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களுக்கு ஏற்றுமதி சந்தை உருவாக்கப்பட்டு 2,000-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மிளகாய்க்கான மதிப்புச் சங்கிலி, திருநெல்வேலி மாவட்டத்தில் முருங்கைக்கான மதிப்புச் சங்கிலி உருவாக்கப்பட்டு விவசாயிகள் ஏற்றுமதி சந்தையுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

தோட்டக்கலைப் பயிர்களின் தடமறிதல் (Traceability) மற்றும் ஏற்றுமதி தயார் தன்மையை மேம்படுத்த, சுமார் 1,000 விவசாயிகள் APEDA வின் Hortinet இணையதளத்தில் பதிவு செய்துள்ளனர். மேலும், வணிகர்கள் (B2B) சந்திப்புகள், ஏற்றுமதி ஊக்குவிப்பு, மின்வணிகம், சந்தைப்படுத்துதல், மதிப்புக்கூட்டல் மற்றும் தரச் சான்றிதழ் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் மூலம் 35,000 பயனாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

**கூட்டுறவு**

கிராமங்களின் முக்கிய நிதி ஆதாரங்களாக விளங்கும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், தமிழ்நாட்டில் பயிர் சாகுபடிக்கான குறுகியகால வேளாண் கடன் தேவைகளை நிறைவு செய்கின்றன. இவற்றால், கடந்த ஐந்து ஆண்டுகளில் இதுவரை 83 இலட்சத்து 64 ஆயிரம் விவசாயிகளுக்கு 69,457 கோடி ரூபாய் பயிர்க்கடனும், 16 இலட்சத்து 9 ஆயிரம் நபர்களுக்கு 8,938 கோடி ரூபாய் கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு உள்ளிட்ட வேளாண் சார்ந்த நடவடிக்கைகளுக்கான கடனும் வழங்கப்பட்டுள்ளன. பயிர்க்கடன், கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு உள்ளிட்ட வேளாண் சார்ந்த நடவடிக்கைகளுக்கான கடன் ஆகியவற்றுக்கான வட்டி மானியமாகவும் உரிய நேரத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான வட்டி ஊக்கத்தொகையாகவும் 3,002 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களை பல்சேவை மையங்களாக மாற்றும் திட்டத்தில் இதுவரை, 4,421 வேளாண் இயந்திரங்கள்

மற்றும் இணைப்புக்கருவிகள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களால் வாங்கப்பட்டு விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு விடப்படுகின்றன.

**உணவு, நுகர்வோர் பாதுகாப்பு**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு 2021-ல் பொறுப்பேற்றபோது, ஒரு இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் மட்டுமே இயங்கி வந்தன. விவசாயிகள் பாடுபட்டுச் சேர்த்த நெல்மணிகளைக் கொள்முதல் செய்து பாதுகாப்பாக சேமித்து வைத்திடும் பொருட்டு கடந்த **ஐந்து ஆண்டுகளில், 4 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 253 நவீன நெல் சேமிப்புத் தளங்கள்** 331 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டிமுடிக்கப்பட்டு, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன**. அதுமட்டுமல்லாமல், வெள்ள காலங்களில், ஒரு நெல் மணிகூட வீணாகக்கூடாது என்ற அடிப்படையில், 495 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **மேலும் 3.30 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 130 நவீன சேமிப்புத்**

**தளங்களுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.**

**கால்நடை பராமரிப்பு**

உழவர்களுக்கு உறுதுணையாக இருந்து ஆண்டாண்டுகாலமாக உடல் உழைப்பு, பால், எரு ஆகியவற்றை அளித்து வரும் கால்நடைச் செல்வங்கள் வேளாண்மையுடன் பின்னிப்பிணைந்தே உள்ளன. எனவேதான், கால்நடைகளின் நலனைக் காத்து, அதன் வாயிலாக விவசாயிகளின் வருமானம், கிராமப்புற பொருளாதாரத்தைப் பெருக்க, கால்நடை பராமரிப்புத்துறை பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. 'ஆண்டுக்கு ஒரு பசுவிற்கு ஒரு கன்று' என்ற நோக்கத்தோடு, சுமார் 56 இலட்சம் மாட்டினங்களுக்கு செயற்கைமுறை கருவூட்டல்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும், 398 இலட்சம் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சை செய்யப்படுகிறது.

பசுந்தீவனம், ஆண்டுமுழுவதும் கால்நடைகளுக்குக் கிடைப்பதை உறுதி செய்யவும், பால் உற்பத்தியைப் பெருக்கவும் 5 ஆண்டுகளில் 23,000 ஏக்கர் விவசாயிகளின் நிலங்களில் பசுந்தீவன

சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தீவன விரயத்தைக் குறைத்து செரிமானத்தை அதிகரிக்க 10,000 எண்கள் மின்சாரத்தால் இயங்கும் புல்நறுக்கும் கருவிகள் 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஆதரவற்ற பெண்கள் மற்றும் விதவைகள் வருமானத்தை ஈட்டுவதற்கு 100 சதவீத மானியத்தில் 5 வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் 38,800 பயனாளிகளுக்கு ரூ.75.63 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன. நாட்டுக்கோழி வளர்ப்பினை ஊக்குவித்து கிராமப்புறப் பெண்களின் வருமானத்தை ஈட்டுவதற்காக 660 நாட்டுக்கோழிப் பண்ணைகள் அமைக்கவும் புறக்கடைக் கோழி வளர்ப்பினை ஊக்குவிக்க 38,700 கிராமப்புற பெண் பயனாளிகளுக்கு தலா 40 நாட்டுக் கோழிக்குஞ்சுகள் வழங்கவும் ரூ.17.20 கோடி செலவிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 31 இடங்களில் ரூ.88.42 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த கால்நடைப் பண்ணைகள் மற்றும் ரூ.30 கோடி மதிப்பீட்டில், செங்கல்பட்டு மாவட்டம்

காட்டுப்பாக்கத்தில் நவீன ஒருங்கிணைந்த இறைச்சி உற்பத்தி மற்றும் இறைச்சி பதப்படுத்தும் வளாகம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதனால் கால்நடைகளைப் பெருக்கி, கால்நடைப் பொருள்களின் ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்து, வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி ஏற்படும்.

**பால்வளம்**

ஊரக மக்களின், குறிப்பாக ஊரக மகளிர் வாழ்வாதாரத்தின் அடித்தளமாக விளங்குவது பால் உற்பத்தி. பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான பால் கொள்முதல் விலையை ஆண்டு முழுவதும் உறுதி செய்வதும், பால் நுகர்வோர்களுக்கு தரமான பாலை நியாயமான விலையில் விற்பனை செய்வதும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு அமைப்புகளின் முக்கிய நோக்கமாகும். இடுபொருட்கள் விலையேற்றம், பால் உற்பத்தி செலவினம் ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டு, தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் வழங்கும் உறுப்பினர்கள் அனைவருக்கும், பால் லிட்டர் ஒன்றுக்கு 3 ரூபாய் ஊக்கத்

தொகையாக வழங்க 18.12.2023 முதல் டிசம்பர், 2025 வரை ரூ.729 கோடி பால் கொள்முதல் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 3.60 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

மேலும், தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் வழங்கும் உறுப்பினர்கள், பாலின் அளவு மற்றும் தரம் ஆகியவற்றினை உடனடியாக அறிந்து கொள்ளும் வகையில், அனைத்து பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கும் பால் பரிசோதனைக் கருவிகள் வழங்கப்பட்டு பால் உற்பத்தியாளர்களுக்கு உடனடி ஒப்புகை சீட்டு வழங்கப்பட்டு வருகிறது.

5,000 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மற்றும் பெண்களுக்கு நிரந்தர மற்றும் கூடுதல் வருவாய் கிடைக்கச்செய்திடும் வகையில் 150 கோடி ரூபாய் மானியத்தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு சிறிய அளவிலான பால் பண்ணைத் திட்டம் 4 சதவீத வட்டி மானியத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**மீன்வளம்**

உள்நாட்டு மீன் வளர்ப்பின் வாயிலாக ஊரக மக்களின் புரதச்சத்திற்கான தேவை குறிப்பிடத்தக்க அளவு நிறைவு செய்யப்படுகிறது. விவசாயிகள் 'வலைஞர்'களாகவும் விளங்கி உயர் வருமானம் பெற்று வருகின்றனர். கடந்த ஐந்து ஆண்டுகளில், அரசு மீன் பண்ணைகளில் 48 கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு, பொது நீர்நிலைகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் பாசனக் குளங்களில் இருப்பு செய்யப்பட்டுள்ளன. இதனால், உள்நாட்டு மீன் உற்பத்தி 1.75 இலட்சம் டன்னிலிருந்து 2.67 இலட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. அரசு மீன் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மொத்தம் ரூ.101 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் ஆண்டுதோறும் அரசு மீன் பண்ணைகளில் மீன் விரலிகள் உற்பத்தி செய்யும் திறன் 12 கோடியிலிருந்து 15 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மீன் வளர்ப்புக் குளங்கள், உயிர் கூழ்ம முறையில் மீன் வளர்ப்பு, அலங்கார மீன் பண்ணைகள், மீன் தீவன ஆலை போன்றவற்றை நிறுவுவதற்காக மொத்தம் 3,147 பயனாளிகளுக்கு ரூ.45 கோடி மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது. 2025-26 ஆம் ஆண்டில், மொத்தம் ரூ.34 கோடி மதிப்பில் 1,739 மீனவர்கள் மற்றும் மீன்

வளர்ப்போர்க்கு விவசாயக் கடன் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. '**அலைகள்**' திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும் 15,525 பயனாளிகளுக்கு ரூ.7.76 கோடி நுண்கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

சிறப்பு வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ், **தமிழ்நாடு திறன் வெற்றி சந்திப்புத் திட்டத்தில்** 6,865 மீனவர் பயனாளிகளுக்கு ரூ.1.68 கோடி செலவில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. கூடுதலாக, அவர்களுக்கு ரூ.81 இலட்சம் திறன் ஊக்கத்தொகையும் வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 5,130 பயிற்சி பெற்ற மீனவர் பயனாளிகள் பல்வேறு அரசு திட்டங்களின் வாயிலாக வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே!**

'**இந்தியாவின் உயிர்நாடி கிராமங்களில்தான் உள்ளது**' என்று மகாத்மா காந்தியடிகள் கிராம வளர்ச்சியினை வலியுறுத்தியுள்ளார்.

வேளாண் வளர்ச்சியும், ஊரக வளர்ச்சியும் ஒன்றோடு ஒன்று சார்ந்தே இருப்பவை. அதனால்தான், வேளாண் வளர்ச்சியினை உயர்த்துவதற்கான பல்வேறு

நடவடிக்கைகள் ஊரக வளர்ச்சித் துறை மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

ஊரகப் பகுதிகளில் உள்ள நீர் மற்றும் நில வளத்தினை மேம்படுத்திட கடந்த ஐந்து ஆண்டுகளில், 68,930 பாரம்பரிய நீர்நிலைகள் புனரமைத்தல் பணிகள், ஒரு இலட்சம் வரத்து மற்றும் பாசனக் கால்வாய்கள் தூர்வாருதல் பணிகள், 29,800 தடுப்பணைகள், 31,325 நிலத்தடி நீர் செறிவூட்டும் அமைப்புகள் மற்றும் 83,015 நடவுப் பணிகள் (2.78 கோடி மரக்கன்றுகள்) போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், ஊரகப் பகுதிகளில் உள்ள சிறு/குறு/ஆதிதிராவிட/பழங்குடியின விவசாயிகள், பெண்களைத் தலைவியாகக் கொண்ட ஏழைக் குடும்பங்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் பொருட்டு கடந்த ஐந்து ஆண்டுகளில், 5,649 விவசாயக் கிணறுகள், 33,853 பண்ணைக்குட்டைகள், 2.66 இலட்சம் மண்வரப்புகள் மற்றும் கல் வரப்புகள் அமைக்கப்பட்டதுடன் 4,323 நில மேம்பாட்டுப் பணிகளும் 15,236 கோடி ரூபாயில் முடிக்கப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு மகளிர் ஊரக வாழ்வாதார இயக்கம்

ஒரு பெண்ணின் முன்னேற்றத்தில் முதலீடு செய்தால், அதன் பலன் ஒட்டுமொத்த குடும்பத்திற்கும் கிடைக்கும் என்ற அடிப்படையில், கடந்த ஐந்து

ஆண்டுகளில், கருவி வங்கி (Tool Bank), பூச்சி மருந்தில்லா மேலாண்மை அங்காடிகள், உயிரி இடுபொருட்கள் உற்பத்தி அலகுகள், தேனீ வளர்ப்பு, மீன் வளர்ப்பு, செம்மறி ஆடு / வெள்ளாடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, புறக்கடைக் கோழி வளர்ப்பு, முருங்கை சாகுபடி, சிறுதானிய உற்பத்தி, விதை உற்பத்தி, தென்னை நாற்று உற்பத்தி, ஊட்டச்சத்துத் தோட்டம், பசுந்தீவன பயிர் சாகுபடி, அசோலா உற்பத்தி, காளான் உற்பத்தி மற்றும் நிலக்கடலை சாகுபடி போன்ற பல்வேறு பண்ணை சார்ந்த நடவடிக்கைகள் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் 53 கோடி ரூபாயில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை**

உலகின் உயிர் காக்கும் உழவரையும் அவர் குடும்பத்தையும் பாதுகாப்பதற்கென முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் இதுவரை, 6.47 இலட்சம் பயனாளிகளுக்கு கல்வி, திருமணம், விபத்து நிவாரணம், மரணம் போன்றவற்றிற்கு உதவித்தொகையாக 819 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, இந்த ஆண்டிலிருந்து நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு விபத்து மரணத்துக்கான இழப்பீடு, ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து

இரண்டு இலட்சம் ரூபாயாகவும், விபத்தினால் ஏற்படும் உடல் உறுப்பு இழப்பிற்கு நிதி உதவி, 20 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு இலட்சம் ரூபாயாகவும், இயற்கை மரணத்துக்கான நிதி உதவி, 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 30 ஆயிரம் ரூபாயாகவும், இறுதிச்சடங்கு செய்வதற்கான நிதி உதவி, 2,500 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**வனத்துறை**

**தமிழ்நாட்டில், மரங்கள் மற்றும் வனப்பரப்பினை** 33 **சதவீதத்திற்குக் கொண்டு வர உறுதிபூண்டுள்ளது நம் அரசு. அதன் ஒரு பகுதியாக**, வனங்களுக்கு வெளியே பசுமைப்பரப்பினை அதிகரிக்கவும், வேளாண் நிலங்களின் **காலநிலை மீள்தன்மையினை மேம்படுத்தவும்**, உழவர்களின் வருமானத்தை உயர்த்தவும் பசுமைத் தமிழகம் இயக்கத்தின்கீழ், மாநிலம் முழுவதும் வேளாண்காடுகள் பெருமளவு ஊக்குவிக்கப்படுகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில், மொத்தம் 3.24 கோடி மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. 2.24 இலட்சம் ஏக்கர் பரப்பு, வேளாண் காடுகளின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. கருங்காலி மரங்கள் வளர்ப்பதை ஊக்குவிக்க, தமிழ்நாடு

கருங்காலி மரங்கள் (பாதுகாப்பு) சட்டம், 1994 ஆனது 13.02.2025க்கு பிறகு நீட்டிப்பு செய்யப்படவில்லை.

**இதுதவிர, வனவிலங்குகளால் குறிப்பாக காட்டுப்பன்றிகளால் ஏற்படும் பயிர் சேதத்திலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் விதமாக, காட்டுப்பன்றிகளை சுட்டுக்கொல்வதற்கான வழி முறைகள் வகுக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.**

இவ்வாறு, வேளாண்மை- உழவர் நலத் துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் ஒவ்வொரு திட்டமும் விவசாயிகளின் வருமான உயர்வு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் மேம்பாடு, உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு மற்றும் நிலையான வேளாண்மை வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் திட்டமிட்ட முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்தகைய சாதனைமிகு செயல்பாடுகளால், காலநிலை மாற்றம் மற்றும் இயற்கை இடர்ப்பாடுகளினால் வேளாண் சாகுபடிப் பரப்பு குறையாதவண்ணம் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன. 2024-25 ஆம் ஆண்டில், இருபோக சாகுபடிப் பரப்பு 13.99 இலட்சம் எக்டராக அதிகரித்துள்ளது. 2019-20 ஆம்

ஆண்டினை ஒப்பிடும்போது இது சுமார் 2 இலட்சம் எக்டர் அதிகமாகும்.

வேளாண்மையில், 2012-13 முதல் 2020-21 வரை சராசரியாக 1.36 சதவீதமாக இருந்த தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பு (GSVA), 2021-22 முதல் 2024-25 வரையிலான காலத்தில் 3.03 சதவீதமாக உயர்ந்துள்ளது. **அடிப்படை ஆண்டான (Base Year) 2011-12 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024-25 ஆம் ஆண்டில் வேளாண்மையில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பு 9.97 சதவீதம் உயர்ந்துள்ளது. அதாவது ரூபாய் மதிப்பில், 2011-12ஆம் ஆண்டில், 53,75,639 இலட்சம் ரூபாயாக இருந்த மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பு, 2024-25 ஆம் ஆண்டில், 59,11,708 இலட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது.**

**2021-22 ஆம் ஆண்டில், வரவு செலவுத்திட்டத்தில் ரூ.34,220 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீடு, 2025-26 ஆம் ஆண்டில், ரூ.45,661 கோடியாக, 11,000 கோடிக்கும் மேல் அதிகரிக்கப்பட்டிருப்பதன் மூலம் வேளாண்மைக்கு இந்த அரசு அளித்துவரும் முக்கியத்துவத்தை அறியலாம்.**

**2026–27 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தில், வேளாண்மை - உழவர்நலத்**

**துறைக்கு 47,248.24 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, உழவர் நலனுக்கான திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளன.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

**"உழவனோர் மன்னர்**
**நாற்று முடியிருக்கும் அவர் தலையில்**
**உழவனோர் வீரர்- என்றால்**
**போர் இருக்கும் அவன் களத்தில்**
**உழவனோர் ஓவியன் – வயல்கள் அனைத்தும்**
**அவன் வரைந்த சித்திரம்**
**உழவன் ஓர் தெய்வம்-உயிர்களைக் காப்பதால்"**

என்று **முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்** உழவர்களைப் போற்றியிருப்பதை எப்போதும் கருத்தில் நிறுத்தியுள்ள **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உழவர் நலன் காக்கவும், உழவுத்தொழிலை உயர்த்தவுமான அனைத்து செயல்பாடுகளையும் சிறப்பாக மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்.**

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி**, விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படவும், தமிழ்நாட்டில் வேளாண்மை செழிக்கும் வகையிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தற்போதுள்ள வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த அனைத்து திட்டங்களும்

தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று கூறி கடந்த ஐந்து ஆண்டுகளும் இத்துறைக்கு முழு ஒத்துழைப்பு அளித்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள், அலுவலர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னோடி மாநிலமாம் தமிழ்நாட்டின் ஐந்து வேளாண் நிதிநிலை அறிக்கைகளையும் சிறப்பாகத் தயாரித்து இந்த மாமன்றத்தில் படைத்தது போலவே, ஐந்தாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சாதனைகளை உள்ளடக்கி இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையினையும் உருவாக்கிட, எனக்கு உறுதுணையாக இருந்த தலைமைச் செயலாளர் திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., அவர்களுக்கும், நிதித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், திரு.த.உதயச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களுக்கும், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், திரு.வ.தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., அவர்களுக்கும், துறைத் தலைவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வாழ்க தமிழ் ! வாழ்க தமிழ்நாடு !**

**வளர்க வேளாண்மை! ஓங்குக உழவர்நலன்!**

**நன்றி ! வணக்கம்.**

## அட்டவணை

## வேளாண்மை மற்றும் சார்புத்துறைகளுக்கான 2026-2027ஆம் ஆண்டிற்கான

## மூலதனம் மற்றும் வருவாய் ஒதுக்கீடு

ரூபாய் ஆயிரத்தில்

| வ எண் | துறை | BE 2025-26 | BE 2026-27 | | |
|---|---|---|---|---|---|
| | | | மூலதனம் | வருவாய் | மொத்தம் |
| 1 | வேளாண்மைத்துறை | 11,575,57,87 | 120,00,04 | 11,464,15,68 | 11,584,15,72 |
| 2 | தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை | 1,665,16,44 | --- | 1,777,73,82 | 1,777,73,82 |
| 3 | வேளாண்மைப் பொறியியல் துறை | 709,69,49 | 18,22,37 | 658,79,15 | 677,01,52 |
| 4 | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை | 245,53,22 | 14,89,26 | 263,64,34 | 278,53,60 |
| 5 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் | 708,84,19 | 40,00,00 | 731,79,28 | 771,79,28 |
| 6 | விதைச்சான்று மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை | 73,86,79 | --- | 78,41,43 | 78,41,43 |
| 7 | சர்க்கரைத்துறை | 251,65,88 | --- | 254,84,00 | 254,84,00 |
| 8 | கால்நடை பராமரிப்புத்துறை | 1,185,87,44 | 28,93,15 | 1,171,33,91 | 1,200,27,06 |
| 9 | பால்வளத்துறை | 669,17,83 | 600,00,09 | 250,30,73 | 850,30,82 |
| 10 | மீன்வளம்-மீனவர் நலத்துறை | 1,472,09,03 | 701,14,03 | 771,56,29 | 1,472,70,32 |
| 11 | தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம் | 331,23,42 | 20,69,50 | 377,04,83 | 397,74,33 |
| 12 | தமிழ்நாடு மீன்வளப்பல்கலைக் கழகம், நாகப்பட்டினம் | 35,39,16 | 61,94 | 50,23,61 | 50,85,55 |

| வ. எண் | துறை | BE 2025-26 | BE 2026-27 | | |
|---|---|---|---|---|---|
| | | | மூலதனம் | வருவாய் | மொத்தம் |
| 13 | கூட்டுறவுத்துறை (பயிர்க்கடன் போன்றவை) | 700,00,00 | --- | 701,49,25 | 701,49,25 |
| 14 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் (நேரடி நெல் கொள்முதல் நிலையம்) | 14,000,00,01 | --- | 14,000,00,00 | 14,000,00,00 |
| 15 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை (MGNREGS , ஊரக சாலைகள், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், அனைத்துக்கிராம அண்ணா மறுமலர்ச்சித்திட்டம்) | 6,144,95,27 | 2,478,63,02 | 3,850,66,58 | 6,329,29,60 |
| 16 | உணவு பதப்படுத்துதல் | 177,79,45 | --- | 177,79,44 | 177,79,44 |
| 17 | பட்டு வளர்ச்சித்துறை | 106,14,07 | --- | 114,97,35 | 114,97,35 |
| 18 | வனத்துறை (வேளாண் காடுகள், மனித-விலங்கு மோதல்) | 1,308,73,70 | 787,54,77 | 739,54,64 | 1,527,09,41 |
| 19 | வருவாய்த்துறை (பயிர் சேதம், உழவர் பாதுகாப்புத்திட்டம் ) | 344,75,18 | --- | 331,17,26 | 331,17,26 |
| 20 | கால்வாய்கள் புனரமைத்தல்-பெரும் பணிகள் | 3,954,96,41 | 4,672,04,39 | --- | 4,672,04,39 |
| | **மொத்தம்** | 45,661,44,85 | 9,482,72,56 | 37,765,51,59 | 47,248,24,15 |

அரசு மைய அச்சகம், சென்னை-600 001.



FIN